


தலைவர் ரசல் எம். நெல்சன்

# நாம் ஒன்றாக முன்னேறிச் செல்லும்போது

ஆசிரியரின் குறிப்பு: ஜனுவரி 14, 2018ல் பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையின் 17வது தலைவராக பணியமர்த்தப்பட்ட தலைவர் ரசல் எம். நெல்சன், ஜனுவரி 16, 2018ல் சால்ட் லேக் ஆலயத்தின் இணைப்புக் கட்டிடத்திலிருந்து ஒரு நேரடி ஒளிபரப்பின்போது, இந்தக் குறிப்புகளை அறிவித்தார். இந்த பதிப்பில் அவருடைய வார்த்தைகள் வெளியிடப்பட அவர் கேட்டுக்கொண்டார்.

அன்பான சகோதர சகோதரிகளே, இந்தக் காலை நேரத்தில் நான் உங்களோடிருப்பதில் தாழ்மையுள்ளவனாயிருக்கிறேன். நான்கு நாட்களுக்கு முன்னால், ஒரு மாபெரும் மனிதரான, தேவனின் ஒரு தீர்க்கதரிசியான தலைவர் தாமஸ் எஸ். மான்சனை இளைப்பாறுதலுக்குள் நாம் அடக்கம் செய்தோம். அவருடைய வாழ்க்கையின் பரிமாணத்தையும், மகத்துவத்தையும் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது. அவர் எனக்கு கற்றுக்கொடுத்தவைகளுக்காக நன்றியுணர்வுடன் எங்கள் நட்பை நான் என்றென்றைக்கும் என் மனதில் வைத்துப் போற்றுவேன். இப்போது, இயேசு கிறிஸ்துவில் முழுமையான விசுவாசத்துடன் வருங்காலத்தை நாம் எதிர்நோக்க வேண்டும், இது அவரது சபை.

இரண்டு நாட்களுக்கு முன்பு சால்ட் லேக் ஆலயத்தின் மேல் அறையில் உயிருடனிருக்கிற அப்போஸ்தலர்கள் அனைவரும் கூடினார்கள். அங்கே அவர்கள் முதலாவதாக இப்போதுள்ள பிரதான தலைமையை மாற்றி அமைக்கவும், இரண்டாவதாக நான் சபையின் தலைவராக சேவை செய்யவும் ஒரு மனதான தீர்மானத்தை எடுத்தார்கள். இந்த ஊழியக்காலத்தில் தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித் மூலமாக மறுஸ்தாபிதம் செய்யப்பட்ட ஆசாரியத்துவத் திறவுகோல்கள் அனைத்தையும் தரித்திருக்கிற சகோதரர்களாகிய, என்னுடைய சகோதரர்கள் சபையின் தலைவராக என்னை நியமிக்கவும், பணியமர்த்தவும் என் தலையின்மேல் அவர்களின் கைகள் வைக்கப்பட்ட உணர்வு எப்படி இருந்தது என உங்களுக்குக்கூற வார்த்தைகள் போதாது.. அது ஒரு பரிசுத்தமான, தாழ்மையான அனுபவம்.

பின்னர், யார் என் ஆலோசகர்களாயிருக்க கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருக்கிறார் என்பதை பகுத்தறிவது எனது பொறுப்பாயிற்று. ஒவ்வொருவரையும் நான் மிகவும் நேசிக்கிற பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் இரண்டு பேரை மட்டும் நான் எப்படி தெரிந்து கொள்வது?

மாதாந்தர பிரதான தலைமைச் செய்தி நிறுத்தப்படவிருக்கிறது.

மாதாந்தர அடிப்படையில் வெளியிடப்பட்ட இந்த பிரதான தலைமைச் செய்தி கடைசியாயிருக்கும். வருங்காலத்தில், தேவைக்கேற்றார்போல சபை பத்திரிகைகளையும் சேர்த்து, சபையின் பல்வேறு உத்திகள் மூலமாக முக்கிய செய்திகளை பிரதான தலைமை பகிர்ந்துகொள்வார்கள்.

என்னுடைய உருக்கமான ஜெபங்களுக்கு பதிலளித்த கர்த்தருக்கு நான் மிக ஆழ்ந்த நன்றியுள்ளவனாயிருக்கிறேன். தலைவர் டாலின் ஹாரிஸ் ஓக்ஸ் மற்றும் தலைவர் ஹென்றி பென்னியன் ஐரிங் முறையாக முதல் மற்றும் இரண்டாவது ஆலோசகர்களாக என்னுடன் சேவை செய்ய சித்தமாயிருப்பதற்காக நான் மிக நன்றியுள்ளவனாயிருக்கிறேன். தலைவர் டியட்டர் எப். உக்டர்ப் பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தில் தன்னுடைய இடத்துக்கு திரும்ப சென்றிருக்கிறார். ஒப்பற்ற தகுதிபெற்ற அவர் ஏற்கனவே முக்கிய பணிகளைப் பெற்றிருக்கிறார்.

தலைவர் மான்சனுக்கு ஆலோசகர்களாக அவர்களுடைய மகத்தான சேவைக்காக அவருக்கும் தலைவர் ஐரிங்குக்கும் நான் நன்றி செலுத்துகிறேன். அவர்கள் முற்றிலுமாக தகுதியுள்ளவர்களாக, அர்ப்பணிப்புள்ளவர்களாக, உணர்த்தப்பட்டவர்களாக இருந்தனர். அவர்களுக்காக நாங்கள் மிக நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். எங்கே அவர்கள் அதிகமாகத் தேவைப்படுகிறார்களோ அங்கே இப்பொழுது சேவை செய்ய அவர்கள் விருப்பமுள்ளவர்களாயிருக்கின்றனர்.

மூப்பில் இரண்டாம் அப்போஸ்தலரான தலைவர் ஓக்ஸ், பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்துக்கும் தலைவராகிறார். ஆயினும், பிரதான தலைமையின் அழைப்பை ஏற்று சபையின் முறைமைக்கேற்ப அடுத்த மூத்தவராக, தலைவர் எம். ரசல் பல்லார்ட் குழுமத்தின் செயல் தலைவராக சேவை செய்வார். கர்த்தரின் சித்தத்தை பகுத்தறியவும் அவருடைய பரிசுத்த பணியை முன்னெடுத்துச் செல்லவும் பன்னிருவருடன் கைகோர்த்து பிரதான தலைமை உழைக்கும்.

உங்களுடைய ஜெபத்திற்காக நாங்கள் உங்களுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். எங்களுக்காக உலகமுழுவதிலும் அவைகள் ஏறெடுக்கப்பட்டிருக்கின்றன. தலைவர் மான்சன் மரித்த அந்த காலையைத் தொடர்ந்து, பென்சன் என்ற பெயருடைய ஒரு நான்கு வயது சிறுவனால் அத்தகைய ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. என்னுடைய மனைவி வென்டிக்கு அவனுடைய தாயால் எழுதப்பட்ட கடிதத்தின் சுருக்கத்தை உங்களுக்கு நான் குறிப்பிடுகிறேன். “தலைவர் மான்சன் அவருடைய மனைவியை மீண்டும் பார்க்கமுடிகிறதற்காக பரலோக பிதாவே உமக்கு நன்றி. எங்களுடைய புதிய தீர்க்கதரிசிக்காக உமக்கு நன்றி. அவர் தைரியமாயிருக்கவும் அவர் புதியவராயிருப்பதால் பயப்படாமலிருக்கவும் அவருக்கு உதவும். அவர் ஆரோக்கியத்திலும் பெலத்திலும் வளர அவருக்குதவும். அவருக்கு ஆசாரியத்துவமிருப்பதால் வல்லமை பெற அவருக்குதவும். எப்போதும் நாங்கள் நல்லவர்களாயிருக்க எங்களுக்குதவும்” என பென்சன் ஜெபித்தான்.

இம்மாதிரியான பிள்ளைகளுக்காகவும், நீதியான, நல்லெண்ணமுடைய பெற்றோரத்துவத்திற்கு ஒப்புக்கொடுத்த பெற்றோருக்கும், ஒவ்வொரு பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், அதிக பாரங்களை சுமந்தும் மிகவும் விருப்பமுள்ளவர்களாக சேவை செய்கிற அங்கத்தினர்களுக்காகவும் நான் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். வேறு வார்த்தைகளிலெனில் உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் மிகத் தாழ்மையுடன் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

கர்த்தர் ஆளுமை செய்கிறார்

நாம் ஒன்றாக முன்னேறிச் செல்லும்போது கர்த்தர் அவருடைய சபையை ஆளுகிற மகத்தான முறையைப்பற்றி சிந்திக்க நான் உங்களை வரவேற்கிறேன். சபையின் ஒரு தலைவர் மரிக்கும்போது அந்த பொறுப்பில் யார் அழைக்கப்படப்போகிறார் என்பதைப்பற்றி ஒரு மர்மமுமில்லை. அங்கே எந்த வாக்கு கேட்பதுவுமில்லை, எந்த

பிரச்சாரமுமில்லை, கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டபடி, ஆனால் அடுத்து வருபவரைப்பற்றிய அமைதியான தெய்வீக திட்டத்தின் பணி மட்டுமே.

ஒரு அப்போஸ்தலரின் சேவையின் ஒவ்வொரு நாளும் வருங்காலத்தில் அதிக பொறுப்பிற்காக கற்றுக்கொள்ளுதல் மற்றும் ஆயத்தப்படுதலின் நாளாயிருக்கிறது. வரிசையில் இளைய இடத்திலிருந்து மூத்த இடத்திற்கு நகர ஒரு அப்போஸ்தலருக்கு அநேக பதின்மஆண்டுகள் சேவை தேவைப்படுகிறது. அந்த நேரத்தில் சபையின் பணியின் ஒவ்வொரு பரிமாணத்திலும் அவர் நேரடியான அனுபவத்தைப் பெறுகிறார். பணிகள் பூமியைச் சுற்றிலும் திரும்பத் திரும்ப அவரைக் கொண்டுபோகும்போது, பூமியிலுள்ள மனிதர்களின் வரலாறுகள், கலாச்சாரங்கள், மற்றும் மொழிகளையும் கூட நன்கு அறிந்து கொள்கிறார். சபையின் தலைமைக்கு அடுத்து வருபவரின் இந்த நடைமுறை தனித்துவமாயிருக்கிறது. இதைப் போன்று வேறு எதையும் நான் அறியேன். அது நம்மை ஆச்சரியப்படுத்தக்கூடாது, ஏனெனில் இது கர்த்தரின் சபை. அவர் மனிதர்கள் போல் கிரியை செய்வதில்லை.

சபையின் ஐந்து முந்தைய தலைவர்களின் கீழ் பன்னிருவர் குழுமத்தில் நான் பணிபுரிந்திருக்கிறேன். ஒவ்வொரு தலைவரின் வெளிப்படுத்தலையும் அந்த வெளிப்படுத்தலுக்கு அவர்களுடைய பிரதிக்கிரியையையும் நான் கவனித்திருக்கிறேன். அவருடைய தீர்க்கதரிசிகளுக்கு கர்த்தர் எப்போதுமே அறிவுறுத்துவார், உணர்த்துவார். கர்த்தர் ஆளுமை செய்கிறார். உலகமுழுவதிலும் அவருடைய பரிசுத்த நாமத்துக்கு சாட்சி பகர நியமிக்கப்பட்ட நாம் அவருடைய சித்தத்தை நாடி, அறிந்து தொடருவோம்.

## உடன்படிக்கையின் பாதையில் நிலைத்திருங்கள்

இப்பொழுது, சபையின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் நான் சொல்கிறேன், உடன்படிக்கையின் பாதையில் நடந்து செல்லுங்கள். அவருடன் உடன்படிக்கை செய்துகொண்டதாலும் பின்னர் அந்த உடன்படிக்கைகளை கைக்கொள்ளுதலாலும் எல்லா இடங்களிலுமுள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் கிடைக்கக்கூடிய ஒவ்வொரு ஆவிக்குரிய ஆசீர்வாதம் மற்றும் சிலாக்கியத்திற்கான கதவு திறக்கும்.

ஒரு புதிய தலைமையாக முடிவை மனதில் வைத்து ஆரம்பிக்க நாங்கள் விரும்புகிறோம். இந்தக் காரணத்திற்காக இன்று ஒரு ஆலயத்திலிருந்து நாங்கள் உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் முயற்சித்துக்கொண்டிருக்கிற முடிவென்பது, கர்த்தரின் ஆலயம் ஒன்றில் வல்லமையுடன் தரிப்பிக்கப்படுவதும், குடும்பங்களாக முத்திரிக்கப்படுவதும், நித்திய ஜீவனான தேவனின் மகத்துவமான வரத்திற்காக நம்மைத் தகுதிபடுத்துகிற ஆலயத்தில் செய்கிற உடன்படிக்கைகளுக்கு உண்மையாயிருத்தலுமாகும். ஆலய நியமங்களும் அங்கே நீங்கள் செய்கிற உடன்படிக்கைகளும் உங்கள் வாழ்வையும், உங்கள் திருமணத்தையும், குடும்பத்தையும் பெலப்படுத்தவும், எதிரியின் தாக்குதல்களுக்கு எதிர்த்து நிற்கும் உங்கள் தகுதிக்கும் திறவுகோலாயிருக்கின்றன. ஆலயத்தில் உங்கள் தொழுகையும், உங்கள் முன்னோர்களுக்காக அங்கே உங்கள் சேவையும், அதிக தனிப்பட்ட வெளிப்படுத்தலுடனும் சமாதானத்துடனும் உங்களை ஆசீர்வதித்து, உடன்படிக்கையின் பாதையில் நிலைத்திருக்க உங்களுடைய ஒப்புக்கொடுத்தலைப் பலப்படுத்தும்.

இப்பொழுது நீங்கள் பாதையிலிருந்து வெளியே வந்திருந்தால், தயவுசெய்து திரும்ப வரும்படி என்னுடைய இருதயத்தின் முழுநம்பிக்கையுடன் நான் உங்களை வரவேற்கிறேன். உங்களுடைய அக்கறைகள் எதுவாயிருந்தாலும், உங்கள்

சவால்கள் எதுவாயிருந்தாலும் இதற்கு கர்த்தரின் சபையாகிய இதில் உங்களுக்கு ஒரு இடமிருக்கிறது. இப்பொழுது உடன்படிக்கையின் பாதைக்கு திரும்பிவரும் உங்கள் செயல்களால் நீங்களும் இன்னமும் பிறக்காத தலைமுறைகளும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். பரலோகத்திலுள்ள நமது பிதா அவருடைய பிள்ளைகளைப் பேணுகிறார், நாம் ஒவ்வொருவரும் வீட்டிற்குத் திரும்பி அவரிடத்தில் வர விரும்புகிறார். வீட்டிற்குத் திரும்பிவர நம் ஒவ்வொருவருக்கும் உதவ, இதுவே பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையின் ஒரு மகத்தான இலக்கு.

பல ஆண்டுகளாக உங்களை சந்தித்ததாலும், உங்களோடு ஆராதித்ததாலும், உங்களுக்கு சேவை செய்ததாலும் வளர்ந்த அன்பான, ஆழ்ந்த அன்பை உங்களுக்கு நான் தெரிவிக்கிறேன். கர்த்தருடைய இரண்டாம் வருகைக்காக உலகத்தை ஆயத்தப்படுத்த உதவுவதில் சகல ஜாதிகளிடத்திலும், கோத்திரங்களிடத்திலும், பாஷைக்காரரிடத்திலும், ஜனங்களிடத்திலும் போவது நமது தெய்வீகப் பொறுப்பு. அவர் பொறுப்பிலிருக்கிறாரென அறிந்துகொண்டவர்களாய் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசத்துடன் இதை நாம் செய்வோம். இது அவருடைய பணி, அவருடைய சபை. நாம் அவருடைய வேலைக்காரர்கள்.

நமது நித்திய பிதாவாகிய தேவனுக்கும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் என்னுடைய பிரார்த்தனையை நான் அறிவிக்கிறேன். நான் அவர்களை அறிவேன், அவர்களை நேசிக்கிறேன், என்னுடைய இறுதி மூச்சுவரை அவர்களுக்கும் உங்களுக்கும் சேவை செய்ய நான் உறுதிமொழியளிக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில், ஆமென்.

© 2018 அனைத்து உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளது, அ.ஐ.நா-ல் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/17. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/17. மொழிபெயர்ப்பு